# ஆசிரை

## கிறிஸ்துவுக்கு புகழ்

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

புதுவருடம் 2019ம் ஆண்டு மலர்கிறது. புதிதாக எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற மனநிலை தோன்றும். புதிதாக உடுப்பது, புதிதாக சோடிப்பது, புதிதாக பொருட்கள் பயன்படுத்துவது, என்றெல்லாம் செயற்பாட்டிலே செய்ய எண்ண தோன்றுகிறது. ஆனால் எண்ணத்திலோ, சிந்தனையிலோ, மனநிலையிலோ, அல்லது பேச்சிலோ, புதிதாக செயல்படுவது என்ற எண்ணம் தோன்றுவது மிகவும் குறைவாகவே இருக்கிறது. அதிலே மட்டும் பழைய வாழ்வை பின்பற்றுவதிலும், பழைய செயல்பாடுகளை சிந்தனைகளை விட்டு விடுவதிலேயோ பெரிய இழுபறி இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. ஆடம்பர வாழ்வுக்கு எவ்வளவும் செலவு செய்யவும், நேரத்தை செலவு செய்யவும், சக்தியை கொடுக்கவும் ஆர்வமாக இருக்கின்றோம். ஆனால் புதிய செயற்பாட்டிற்கும், புதிய சிந்தனை ஓட்டத்திற்கும், புதிய யுகத்தின் நோக்கத்திற்கும், புதிய செயற்பாட்டாளருக்கும், சிந்தனை யாளருக்கும், புதிய சவால்களுக்கும் இடத்தை, நேரத்தை, சக்தியை செலவழிப்பதற்கு எமக்கு மனமில்லை, நேரமில்லை. எமக்கு முடியாத்தன்மை காணக்கூடியதாக உள்ளது.

மூத்தோர் வாக்கு சொல்லுகிறது "பழையன கழிதலும் புதியன புகுதலும்" மிகவும் அழகான அனுபவம் நிறைந்த வாக்காக உள்ளது. என்றுமே காலத்தால் அழியாத மிகவும் உன்னதமான வாக்காக உள்ளது. அடிப்படையிலே புதிய சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும், கொடுக்காதத்திற்கான காரணம் பல உண்டு. அவற்றில் மிகவும் முக்கியமானது எரிச்சல், பொறாமை, காய்மைகாரம், போட்டிமனபான்மை, அதிகாரபோக்கு போன்ற தீய எண்ணப்பாடுகள் மிகவும் முக்கியமானது. இது ஒரு மனிதனின் உள்ளத்தில் இருக்கும் வரைக்கும் புதியவகைகளுக்கு இடமில்லை. இயேசு பிறந்தவுடன் இரண்டு வயதிற்கு உட்பட்ட குழந்தைகளை ஏரோது அரசன் தலையை வெட்டிகொலை செய்தான். அதற்கு அவன் மனதிலிருந்த எரிச்சல், பொறாமை, காய்மைகாரம், போட்டிமனபான்மை, அதிகாரபோக்கு தீய மன நிலைகளே முக்கிய காரணங்கள். இப்படியான மனநிலை உள்ளவர்கள் ஒருகாலமும் புதுமையை விரும்ப மாட்டார்கள். தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையிலும் சரி, குடும்ப வாழ்க்கையிலும் சரி, பங்குவாழ்விலும் சரி இப்படியான நிலை இருக்கும். உலகளாவியரீதியிலும் இவற்றை காணக்கூடியதாக உள்ளது. அரசியலிலும், பொருளாதாரத்திலும், சமூகத்திலும், ஆண்மீகதிலும், இப்படியான செயற்பாடுகள் ஆழமாக புரையோடிக்கிடக்கிறதை அவதானிக்க கூடியதாக உள்ளது. மேற்குறிப்பிட்ட நான்கு வகையான தளத்திலும் அடிப்படையில் வெட்ட வெளிச்சமாக தென்படுவதை காணக்கூடியதாக உள்ளது. ஆகவே தனி மனிதனின் மனநிலை மாற்றம் முழு உலகத்தினுடைய மாற்றமாக இருக்கிறது. அப்போது தான் நாம் புதிய உலகத்தை படைக்க முடியும்.

**நன்றி**

**அன்புடன்,**
**அருட்பணி யூட் நிக்ஸன்**
**Parish Priest**
**Our Lady of Deliverance Tamil Catholic Mission**
**Montreal (QC), Canada.**